9 ஏக்கர் நிலப் பரப்பில் ரூபாய் 12.8 கோடி மூலதனத்தில் அமையவிருக்கிறது. அதனைப்போல் கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலும், பெரியார் மாவட்டத்தில் ஈரோடு நகருக்கு அருகிலும் வணிக வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் விவசாய விளை பொருட்கள் அதிக அளவில் வரத்து உள்ள முக்கிய நகரங்களில், இடம் கிடைக்கும் வசதியை அடிப்படையாகக் கொண்டு, அந்த மாவட்ட விற்பனைக் குழுவின் நிதிநிலையை அனுசரித்து படிப்படியாக வரும் ஆண்டுகளில் வணிக வளாகம் அமைக்கப்படும். அப்போது நன்னிலம் தொகுதியும் பரிசீலிக்கப்படும்.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வளாகம் அமைப்பதற்கு முன்னால் அதற்குண்டான ரோடுகள், சாலைகள் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வளாகம் அமைத்ததற்குப் பின்னால் சாலைகள் பற்றி ஆலோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 151, திரு. ஆர்.டி. அரங்கநாதன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

151—

விருத்தாசலத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

*22345—**திரு. ஆர்.டி. அரங்கநாதன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விருத்தாசலம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர்.டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இன்று தமிழகத்திலே ஏழை எளிய மக்களுடைய வயிற்றில் பால் வார்த்ததைப் போல பல்வேறு திட்டங்களை உருவாக்கி தந்துள்ள இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே அங்கே பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் விரும்புகிறார்கள். ஏற்கெனவே இது குறித்து அரசிடத்திலே கேட்கப்பட்டபோது அப்போதிருந்த அமைச்சருடைய குறுக்கீட்டால் அது சேத்தியாதோப்பு குளிரூட்டும் பால் நிலையமாக மாற்றப்பட்டது. இருப்பினும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் அந்தப் பகுதியிலே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைத்துத் தருவதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் வட்டத்தில் பால் உற்பத்தி மிக குறைந்த அளவு இருக்கிறது. மேலும் உற்பத்திக்கு வாய்ப்பில்லாத சூழ்நிலையில், விருத்தாசலம் நகரில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. ஆர். டி. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து முன்பே சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அந்தப் பகுதியிலே ஆய்வு செய்தபோது, அங்கே பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைக்க வாய்ப்பிருக்கிறது என்று அறிவித்திருந்தார்கள். இருப்பினும் அங்கே அமைக்கப்படாத காரணத்தால் எதிர்காலத்திலாவது அந்தப் பகுதியிலே போதிய பால் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி, அந்தப் பகுதியிலே ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வர இருக்கிற காலத்தில் அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் சேத்தியாதோப்பு பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று

1995 மார்ச் 29]

இருக்கிறது. அது தற்சமயம் 10 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்து குளிரூட்டக் கூடிய திறன் உடையது. தற்சமயம் அங்கே 7 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு குளிரூட்டப்படுகிற காரணத்தால் மேலும் பால் உற்பத்தி அதிகரித்தாலும்கூட, அதையே பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை இருப்பதால் விருத்தாசலத்தில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 152, திரு. செ.து. வரதராஜன், இருக்கையில் இல்லை.

வினா எண் 153, திருமதி ஜீனத் சர்புதீன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

153—

பெண் குழந்தைகளுக்கு வைப்பு நிதி அளித்தல்

9025*—திருமதி ஜீனத் சர்புதீன்:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண் குழந்தை பிறந்த பின் கருத்தடை அறுவை செய்து கொண்டால், அந்த பெண் குழந்தையின் பேரில் ரூபாய் இரண்டாயிரம் வைப்பு நிதி அளிக்கும் திட்டத்தின் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவரம் அடங்கிய அறிக்கை அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த தம்பதிகள் ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பிறகு யாரேனும் ஒருவர் கருத்தடை அறுவை